# பல்கலைக்கழக மாணவர்களுக்கான மூன்று நாள் வதிவிட புத்தாக்க பயிற்சிநெறி












(யூ.கே.காலித்தீன், எம்.வை.அமீர்)

கல்முனை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மூன்று நாள் வதிவிட புத்தாக்க பயிற்சிநெறி ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் அனுசரணையில் கடந்த 30 ஆம் திகதி தொடக்கம் 01ம் திகதி வரை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஊழியர் அபிவிருத்தி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இப் பயிற்சிநெறியானது அம்பாறை மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ள அனைத்து இன மாணவ மாணவியரையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இந்நிகழ்வு கல்லூரியின் பழைய மாணவ சங்கத்தின் முன்னாள் செயலாளரும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட விரிவுரையாளருமான அஸ்லம் சஜாவின் ஒருங்கிணைப்பின் கீழ் பல்துறை சார்ந்த விசேட வளவாளர்களை கொண்டு நடத்தப்பட்டது.

பயிற்சிநெறியின் இறுதி நிகழ்வுக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.சலீம் பிரதம அதிதியாகவும், கௌரவ அதிதிகளாக சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.எல்.எம் சலீம், கல்லூரியின் அதிபர் பீ.எம்.எம்.பதுர்தீன், ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் பிரதிநிதி நௌஸாட் ஏ. ஜப்பார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் அதிதிகளாலும் பழைய மாணவ சங்கத்தின் உயர்பீட உறுப்பினர்களாலும் பயிற்சிநெறியில் கலந்துகொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன.